உ



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
தென் அல்வையம்பதியின்
மாலிசந்தைப்பதி வாசரும்,
சைவ வேளாண்குல திலகருமாகிய

**ஸ்ரீமான் கணபதிப்பிள்ளை**

அவர்களின் அருந்தவப் புதல்வர்

சட்டத்தரணி

## ஸ்ரீமான் இராசரத்தினம்

அவர்களின் சிவபதப் பிராப்தியைக் குறித்த

# நினைவு மலர்

1986

EVELYN RUTNAM LIBRARY JAFFNA
39/11

சட்டத்தரணி

# ஸ்ரீமான் க. இராசரத்தினம் அவர்கள்



EVELYN RUTNAM
JAFFNA

**தோற்றம்: 17-7-1910** **மறைவு: 20-7-1986**

## திதி வெண்பா

சீராரும் அட்சயத்துச் சேராடி பூர்வபக்கம்
ஏரார் சதுர்த்தசிசேர் ஞாயிறுநாள் — பேராரும்
சீயா னிராச இரத்தினமே ஈசனடி
தாமா யடைந்தான் தனி.

## தோற்றம்

சீர்மேவு மல்லவையம் பதியின் மேய
    சிறந்தோங்கும் வேளாள குலதிலகனும்
பேராரும் கணபதிப் பிள்ளையும் அன்பினுள்
    பெட்புமிகு மாரி முத்தும்
சீராருஞ் செய்தவப் பயனாக அவனியில்
    சீராயிரத்தினேடொன்பது நாறுபத்தாம்
ஏராரும் ஆண்டாடி பதினேழில் உதித்தனன்
    எழில்ராச ரத்தினக் குரிசில்தானே.

## மறைவு

சேராயிரத்தித் தொளாயிரத் தோடுமே
    சேரும் எண்பத் தாறினில்
ஏராரும் ஆடிமதி இருபதாம் நாளினில்
    ஏற்றநற் சதுர்த்தசி தனில்
பேராரும் ராசரத் தினச்செம்மல் இவ்வுலகைப்
    பேணுது பிரிந்து சென்றே
நீராருஞ் சடையண்ணல் நிரைகழல்கள் சரணுக
    நினைந்து உளம் பெற்றனரோ.

உ

# தோத்திரப் பாக்கள்

## தேவாரம்

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

தோடுடைய செவியன்விடை ஏறியோர்
தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்
தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவனன்றே.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல் லகதிக்கில் யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே.

மழுவாள் ஏந்தி மாதோர் பாகமாய்ச்
செழுவார் செம்பொன் பள்ளிமேவிய
எழிலார் புரிபுன் சடைஎம் இறைவனைத்
தொழுவார் தம்மேல் துயரம் இல்லையே.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

## திருநாவுக்கரச நாயனார்

கூற்றாயினவாறு விலக் ககலீர்
கொடுமை பல செய்தனன் நானறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றா தென்வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றே னடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள் ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

நேர்ந்தொருத்தி ஒருபாகத் தடங்கக்கண்டு
நிலை தளர ஆயிரமாமு கத்தினோடு
பாய்ந்தொருத்தி படர்சடைமேற் பயிலக்கண்டு
படஅரவும் பனிமதியும் வைத்த செல்வர்
தாந்திருந்தத் தம்மனத்தை ஒருக்காத் தொண்டர்
தனித்தொரு தண் டுண்றிமெய் தளராமுன்னம்
பூந்துருத்தி பூந்துருத்தி என்பீராகில்
பொல்லாப் புலால் துருத்தி போக்கலாமே.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

## சுந்தரமூர்த்தி நாயனார்

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளாய்
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூர
[ருட்டுறையுள்
அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனல் ஆமே

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினை நன்கறிந்து
விரும்பு வரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவிய ஊர்வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில் சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே.

எங்கேனும் இருந்துன் அடியேன் உனைநினைத்தால்
அங்கேவந் தென்னொடும் உடனாகி நின்றருளி
இங்கே என் வினையை யறுத்திட் டெனையாளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே.

தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப்பாடாதே எந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதரும் சோறும்கூரையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற்கு
யாதும் ஐயுறவில்லையே.

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்று அறியொண்ணு
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்து
அணியாரூரானை மறக்கலுமாமே.

## திருவாசகம்

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறு அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே.

வெள்ளந் தாள்விரிசடையாய் விடையாய் விண்ணேர்
பெருமானேஎனக் கேட்டுவேட்ட நெஞ்சாய்
பள்ளந்தாழ உறுபுனலிற் கீழ்மேலாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணு
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையினேற்கே.

போற்றியோம் நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோம் நமச்சிவாய புறம்எனைப் போக்கல் கண்
[டாய்
போற்றியோம் நமச்சிவாய சயசய போற்றி போற்றி.

பொய்யாய் செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாய்க் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயா என்ஆருயிரே அம்பலவா என்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ!

நித்தமணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பவரால் அன்னே என்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும்.

இந்திரிய வயம்மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழுவேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்து சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.

புற்றில்வாழ் அரவும் அஞ்சேன் பொய்யர் தம் மெய்
[யும் அஞ்சேன்
கற்றைவார்சடை எம்மண்ணல் கண்ணுதல் பாதம்நண்ணி
மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டென நினைந்தெம்
[பெம்மாற்
கற்றிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்

ஆலிக்கு மந்தணர் வாழ்கின்றதில்லை சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

திருவுங் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாடத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்கநின்ற ஈராறு தோள்கள் போற்றி
காஞ்சிமாவடி வைகும்செவ்வேள் மலரடிபோற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி
[போற்றி.

## திருப்புகழ்

நாதவிந்து கலாதீ நமோநம
வேத மந்திரஸ்வ ரூபா நமோநம
ஞானபண்டித சாமீ நமோநம வெகுகோடி
நாமசம்பு குமாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீதகிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ

தீப மங்கள சோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவகுஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈதலும் பல கோலால பூசையும்
ஓதலுங்குண ஆசார நீதியும்
ஈரமுங் குருசீர் பாத சேவையும் மறவாத
ஏழ்தலம் புகழ் காவேரியால் விளை
சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா
ஆதரம் பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முன்னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகையி லையிலேகி
ஆதியந்த வுலாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனடதில்
ஆவிதன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையரனைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## கந்தர் அநுபூதி

ஆனஅமுதே அயில்வேல் அரசே
ஞானகரனே நவிலத் தகுமே
யானாகிய என்னை விழுங்கிவெறுந்
தானாய் நிலைநின்றது தற்பரமே.

பாழ்வாழ் வெனுமிப் படுமாயையிலே
வீழ்வாயென வென்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தன தாமுளவோ
வாழ்வாயினிநீ மயில்வா கனனே.

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில் வாகனனே
யோகா சிவஞா னோப தேசிகனே.

எந்தாயு மெனக் கருள் தந்தையுநீ
சிந்தா குலமானவை தீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## திருமந்திரம்

திருவடியே சிவ மாவது தேரில்
திருவடியே சிவ யோகம் சிந்திக்கில்
திருவடியே செல் கதியது செப்பிற்
திருவடியே தஞ்சம் உட்டெளி வார்க்கே.

காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போனபின் கூட்டையே.

அருளும் அரசரும் ஆனையும் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னம்
தெருளும் உயிரொடும் செல்வனைச் சேரின்
மருளும் பினையவன் மாதவம் அன்றே.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே.

உடலாய் உயிராய் உலகம தாகிக்
கடலாய்க் கார்முகில் நீர்பொழி வானாய்
இடையா உலப்பிலி யெங்கும் தானாகி
அடையார் பெருவிழி அண்ணல் நின்றானே.

உடம்பா ராழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் எய்தவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே.

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே.

பிரான் அருள் உண்டெனில் உண்டுநற்செல்வம்
பிரான் அருளுண்டெனில் உண்டு நல்ஞானம்
பிரான் அருளிற் பெருந் தன்மையு முண்டு
பிரான் அருளாற் பெருந் தெய்வமு மாமே.

மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே.

## தேவி தோத்திரம் (பராசக்தி)

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில்வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர்என்ப
[வர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

### துர்க்கை

நடுங்காவகை அன்பர் நெஞ்சினிற்
புக்கவர் நண்ணலரைக்
கொடுங்காளி யுண்ணக் கொடுக்கும்
குருதிகள் கொப்பளித்திட்டு
இடும்பாரக் கொங்கையின் மீதே
இரத்தத் திலகமிடும்
தொடுங்கார் மனோன்மணி வாராகி
நீலி தொழிலிதுவே.

### இலக்குமி

செங்கமலப் பொலந்தாதில் திகழ்ந்தொளிரும்
எழின்மேனித் திருவேவேலை
அங்கணுலகிருள் துரக்கும் மலர்க்கதிராய்
வெண்மதியாய் அமரர்க்கூட்டும்

பொங்கழலாய் உலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின்மண்ணில்
எங்குளைநீ யவனன்றோ மல்லல்வளஞ்
சிறந்தோங்கி இருப்பதம்மா.

சரஸ்வதி

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றும்ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகலகலா வல்லியே.

## நற்சிந்தனை

நாள்தோறும் மக்கள் இறந்து போவதைப் பார்த்திருந்தும் நான்மட்டும் அதற்கு விலக்காவேன் என்றெண்ணும் மடமை நீங்க எம்பெருமானே அருள் செய்வீராக!

அற்பமான பொருளுக்காகத் தாகம் கொண்டு தவிக்கும் என் மனதில் அருளில் தாகம் கொள்ளும்படி எம்பெருமானே அருள்புரிவீராக!

உள்ளத்திலே ஒன்று வாய்ச்சொல்லிலே ஒன்று பேசும் புல்லியனாகிய எனக்கு எண்ணியபடி உண்மை பேசும் ஆற்றலை இறைவனே தந்தருள்வாயாக!

சூரியன் முன்னிலையில் இருள் இல்லை. இறைவா! உனது அன்பரிடத்தில் அச்சமே இல்லை.

என்னைக் குணசீலன் ஆக்குவதே இறைவா! நான் உன்னை வேண்டிக் கொள்வது.

சேவை செய்வதன் மூலம் உயிர்களோடு உறவாடி மகிழ இறைவா! அருள் பாலிப்பீராக!

உலகை எல்லாம் நல்லனவாக ஒழுங்கு படுத்த முயலும் நான் முதலில் என்னை நல்லவனாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

ஆருயிர்க் கெல்லாம் அன்புடன் தொண்டு புரியும் ஆர்வத்தை அண்ணலே எனக்குநீ நல்குவாயாக!

— சுவாமி சித்பவானந்தர்

நறுமணமுள்ள மலர்கள் செம்மையில் உள்ளவர்களைத் தனக்கு அண்மையாக அழைக்கின்றன. துர்மணமுள்ள மலர்கள் தனக்கு அண்மையிலுள்ளவர்களை சேய்மைக்கு ஓடச் செய்கின்றன. மணமற்ற மலர்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. மகனே! இந்த இயற்கையின் அற்புதத்தை உணர்ந்து குணவானாகுக! — ஆ.சி

கடவுள் முன்னிலையில் உனது குறையைச் சொல்லி அழு. அப்போது நீ உலகத்திலே சிரித்து மகிழ்ந்து இன்பமாக வாழ்வாய். — ஆ.சி

கடவுளை அம்மா! அப்பா! என்றே கூவி அழைப்பாய். அப்போது கடவுள் அம்மை அப்பராய் வந்து பிள்ளையின் குறை அறிந்து நிறைவு செய்வர். — ஆ.சி

காட்சிக்கு அழகான மலர்கள் தண்ணளியின் சொரூபங்கள் மகிழ்ச்சியின் பிரதிபலிப்புக்கள், — ஆ.சி

நான் பண்பற்றவனாயினும் பண்புடையவர்களுக்குப் பயப்படுகிறேன். அவர்களைப் பெரிதாக மதிக்கிறேன். பண்பற்றவர்களை எதிர்க்கிறேன். அவமதிக்கிறேன். — ஆ.சி

உ

சிவமயம்

சட்டத்தரணி

# ஸ்ரீமான் கணபதிப்பிள்ளை இராசரத்தினம்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

யாழ்ப்பாணத்தில் உள்ள மாண்புமிக்க ஊர்களில் அல்வையம்பதியும் ஒன்று. இவ்வூர் வடமராட்சிப் பகுதியில் உள்ளது: ஒரு காலத்தில் இப்பகுதியைச் சோழர் ஆட்சிபுரிந்த காரணத்தால் வடமராட்சி என வழங்கலாயிற்று. வடமர் எனப்படுவோர் சோழர் ஆவர். இதற்கு ஆதாரமாக வடமராட்சிப்பகுதியில் உள்ள ஓர் ஊர் செம்பியன்பற்று என இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது. செம்பியன் எனப்படுவர் சோழர். இவ்வாறே பாண்டியர் ஆட்சியில் இருந்த பகுதி தென்மராட்சி என அழைக்கப்படுகிறது. தென்மர் எனப்படுவோர் பாண்டியர். அதனால் வடமராட்சி தென்மராட்சிப் பகுதிகளில் சோழபாண்டியப் பெருங்குடிமக்கள் குடியமர்ந்து வாழ்ந்து வரலாயினர். அவர்கள் பரம்பரையினரே இன்று அப்பகுதிகளில் வாழும் மக்கள்.

அல்வாய் என அழைக்கப்படும் அல்வையம்பதி சிறந்த நிலவளமும் நல்ல நீர்வளமும் உள்ளது. கல்வியும் கேள்வியும் பண்பும் நிறைந்த பெருங்குடிமக்கள் வாழும்நாடு. "முயற்சி திருவினையாக்கும்" "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பதற்கு இலக்கியமாக இங்குள்ளமக்கள் இந்நாட்டின் இயற்கையான நிலவள நீர்வளங்களைப் பயன்படுத்தி விவசாயத்தைக் கண்ணும் கருத்துமாகப் பேணி வருகின்றனர். அது பற்றுக்கோடாக வியாபார முயற்சியிலும் அதிகம் ஊக்கமுடையவர்களாய் முயற்சியுடையவர்களாய் பொருளீட்டி வருகின்றனர்.

இத்தகைய வேளாண் பெருங்குடிமக்கள் பரம்பரையில் வந்தவரே ஸ்ரீமான் கணபதிப்பிள்ளை என்பவர். இவர் மேற்கூறியவாறு விவசாயமும் வியாபாரமும் உடையவராய் இருந்த காரணத்தினால் தென்னிலங்கையில் மலைநாட்டுத்தொடர்பு உடையவராய் இருந்தார். இவர் கம்பளையை அவரது சொந்தஊர் என்று யாராலும்

புகழ்ந்து பேசத்தக்கநிலையில் கம்பளையில் உன்னதநிலைபெற்றுச் சிறப்புடன் வாழ்ந்தார். கம்பளையில் அவர் காலத்தில் வாழ்ந்த சிங்கள மக்களும் தமிழ்மக்களும் ஸ்ரீமான் கணபதிப்பிள்ளையைப் போற்றிப்புகழ்ந்து தமக்கோர் தலைவனாக, அவர் சொற்கேட்டும் அவர் உதவியைப் பெற்றும் வாழ்ந்து வந்தனர். கம்பளையில் ஏராளமான நிலபுலங்களும் சிறந்தவீடும் இருந்தன.

இவரது அருந்தவப் புதல்வனே ஸ்ரீ மா ன் இராசரத்தினம் அவர்கள். இவரோடு உடன்பிறந்தோர் ஸ்ரீமான் இரத்தினசிங்கம் ஸ்ரீமான் சிவப்பிரகாசம், திருமதி மகேஸ்வரி என் போ ரா வ ர். இ வ ர் க ளி ல் இராசரத்தினம் அவர்கள் இரத்தினசிங்கத்துக்கு அடுத்த இளைய தம்பியாராவர்.

இவர் இயல்பாகவே, பொறுமை, சாந்தம், இ ன் சொ ல், தண்ணளி நுண்மான் நுழைபுலம் உடையவராய் இருந்தார். கல்வியில் பருகுவவன்ன ஆர்வத்தனாகி பெருவேட்கையோடு க ற் று உயர் நிலையடைந்தார்.

இவர், அல்லைப்பம்பதி வாசரும் உயர்வேளாண் குலத்தினரும், ஸ்ரீமான் கணபதிப்பிள்ளைக்கு உற்றமைத்துனரும் ஆகிய ஸ்ரீமான் பரமகுருவுக்கும், கணபதிப்பிள்ளையின் சகோதரி பார்வதிப்பிள்ளைக்கும் அருந்தவப்புதல்வியாகப் பிறந்த ஒரேயொரு மகளான செல்வி நேசரத்தினத்தை முறைப்படி கடிமணம் செய்துகொண்டார்.

ஸ்ரீமான் பரமகுருவோ முருகன்தானோ என்று சொல்லுமாறு அழகும், ஆண்மையும், நேர்மையும், உள்ளத்தூய்மையும் வாய்மையும் ஒருங்கே அமையப்பெற்ற ஓர் உத்தமர் ஆ வ ர். இவரும் விவசாயத்தையும், வியாபாரத்தையும் தமது தொ ழி லா க க் கொண்டு மைத்துனர் கணபதிப்பிள்ளையின் ஆதரவோடு வியாபாரத்தில் பெரும் பொருளீட்டினார். ஊரிலே உள்ளவர்கள் யாவராலும் போற்றிப்புகழப்பட்டார். எல்லோரும் அவர்சொல்லுக்கு அமைந்து நடக்கும் அளவுக்கு பெருமைபெற்றார்.

ஸ்ரீமான் இராசரத்தினம் அவர்களும் திருமதி நேசரத்தினம் அவர்களும் ஒருயிரும் ஈருடலுமாக ஒருமனப்பட்டு அன்புநெறியைக் கடைப்பிடித்து இல்லறத்தை இனிதுநடாத்தி இன்பமாக வாழ்ந்துவந்தனர்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'' என்பது வள்ளுவனார் வாக்கு.

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்" என்பது திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தது. அவர்கள் கூற்றுக்கு இலக்கிய மாக அன்புநெறியிலே இன்பவாழ்வு கண்டவர்கள் அவர்கள்.

வீடுபேற்றுக்கு அடிக்கல்லாய் அமைவது இல்லற வாழ்க்கையே. இவர்கள் இருவரும் அதற்குரிய அறவழியிற்றவருது இல்லற வாழ்க் கையைப் போற்றி வாழ்ந்தார்கள்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது என்றும்
அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போய்ப் பெறுவதெவன் என்றும்
அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பதில்லாயின் நன்று" என்றும்

வள்ளுவனார் கூறுமாற்றால் வீடுபேற்றுக்கு அடிக்கல்லாய் அமை வது அறவழிப்பட்ட இல்லறவாழ்க்கையே என்பது தெளிவாகிற தன்றே?

அறவழிப்பட்ட இல்வாழ்க்கைக்கு மங்கலம் ஆவது மனையாளே; அஃதாவது அவளது நற்குண நற்செயல்களே. "தெய்வந்தொழாள் கொழுநற்றொழுதெழுவாள், அன்றே கற்புடைப் பெண்டிர்." பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னும் திண்மையுண்டாகப் பெறின்" கற்பின்செல்வியன்றே கண்ணகி. இன்று தெய்வமாக இருந்து அருள்புரிகின்றுளன்றே? இல்வாழ்க்கைப்பட்ட மகளிரின் வீடுபேற்றிற்கு கணவனே ஊன்றுகோலாவான்.

இத்தகைய அறவழிப்பட்ட இல்வாழ்க்கைக்கு அணிகலனுய் அமைவது நன்மக்கட்பேறே. ஸ்ரீமான் இராசரத்தினம் அவர்களுக் கும், அன்பின் கிழத்தி திருமதி நேசரத்தினம் அவர்களுக்கும் உல கம் போற்றும் நன்மக்கட்பேருக ஒன்பதின்மர் உளர்.

"மகன் தந்தைக்காற்றுமுதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் என்னும் சொல்" அஃதாவது இப்பிள் ளையைப் பெறுதற்கு இப்பிள்ளையின் தந்தை முற்பிறப்பில் என்ன தவம் செய்தானே? என உலகோர் பேசிப்புகழுமாறு செய்தலே யாகும் என்பது. இதுவே ஒருபிள்ளை பெற்றோருக்குச் செய்யும் ஒப்பிலாச் சிறப்புடைய இன்றியமையாத கடமையாகும் என்பது வள்ளுவனார் கருத்து.

அவ்வாறே ஒன்பதின்மரும் மனம், வாக்கு, காய சுத்தியுடையவர்களாய், தக்கோர் போற்றும் சீலராய், அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என்ற மூதுரைக்கேற்ப தமது தாய்தந்தையரைத் தெய்வமாகப்போற்றி அவர்களுக்கு இன்றும் கீழ்ப்படிந்து வாழும் பெற்றியர்? இதனை அவர்களின் நல்வாழ்வையே சான்றாக எடுத்துக் காட்டுகின்றதன்றோ? என்னே? மனம்போல வாழ்வு என்பார்கள். அவர்கள் யாருக்கும் எந்தவகையிலும் தீமையில்லாதவர்களாய் இயலுமானவகையில் நல்லனவே செய்வார்கள்.

அவர்கள்தான்,

திரு. இராதாக்கிருஷ்ணன் இவரின் அன்புமனைவி திருமதி யோகேஸ்வரி. இராதாக்கிருஷ்ணன் கணக்காளராக கன்னியத்துடன் கடமையாற்றி வருகின்றார். அடுத்த அவரது தம்பியாரே திரு. ஆனந்தநடராசா என்பவர், இவர் தந்தையாரைப்போன்று சட்டத்தரணியாக இருக்கின்றார். இவரது அன்புக்குரிய பாரியார் திருமதி செகதீஸ்வரியாவார். அடுத்ததம்பியார் திரு உதயசூரியன் இவர் கொம்பியூட்டர் புறோக்கிறமர் ஆக வேலைசெய்து வருகின்றார். இவரின் அன்பின் கிழத்தியே திருமதி யசோதா என்பவர். அடுத்த நான்காவது தம்பியாரே திரு. ஞானசண்முகன் எனப்படுபவர். இவர் மணம் செய்யாதவர். இனிப் பெண்மகளில் மூத்தவர் திருமதி மங்களேஸ்வரி என்பவர். இவர் ஓர் சிறந்த மருத்துவர் (டாக்டர்). இவரின் அன்புக்கொழுநன் திரு. கணேசலிங்கம் என்பவர். இவர் ஓர் பொறியியலாளர். அடுத்த சகோதரி திருமதி மகாலட்சுமி யாவர். இவரின் அன்புக் கணவன் சட்டத்தரணி திரு. அசோகநாதன். இவர் அண்மையில் காலமாகி விட்டார். இவரின் அடுத்த சகோதரி திருமதி சண்முகவதி என்பவர். இவரின் அன்புக் கணவன் கணக்காளர் திரு. பாக்கியநேசன் என்பவராவார். இவரின் இளைய தங்கச்சியார் திருமதி ஞானசரஸ்வதி என்பவர். இவரின் கொழுநன் விஞ்ஞானப் பட்டதாரி திரு. லோகநாதன் என்பவர். எல்லோருக்கும் இளைய சகோதரியே செல்வி யோகேஸ்வரி என்பவர்.

இனி ஸ்ரீமான் இராசரத்தினத்துக்குப் பேரப்பிள்ளைகள் செல்வியர் மகிமா, யமுனா, சிந்துஜா, உஷா என்பவரும் செல்வன் சஜீவகன் என்பவனுமாவார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"

அஃதாவது பெற்றோரின் தகைமை அவர்களது மக்களைக் கொண்டு உணரப்படும் என்பது, பெற்றோரின் தகைமை, தகைமை

இன்மையை உலகுக்கு எடுத்துக்காட்டும் உரைகல்லாய் அமைந்தவர் மக்களே என்பது வள்ளுவனுர் கருத்து.

எனவே ஸ்ரீமான் இராசரத்தினம் அவர்கள் எத்துணைத் தகமை உடையார் என்பது உலகுதானேயறியும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றவாறு தமது வாழ்நாள் முழுமையும் மற்ருேரால் போற்றப்பட்டவரேயன்றி தூற்றப்பட்டவரல்லர். தமது தொழில் சம்பந்தமான (சட்டத்தரணி) கடமைகள் செய்யும்போது அறநெறியைப் பின்பற்றியே பொருளீட்டினுர். இவரைக் கம்பளையிலுள்ள தமிழ் சிங்கள மக்கள் யாபேரும் கம்பளை இராசா என்றே அழைத்தனர் என்ருல் அவரின் ஆளுமைதான் என்னே.

இன்னும் அவரது உயிர் பிரியும் வரையும் ஏதுமொரு கவலையுமின்றி உண்டு, உடுத்து, உறங்கி இன்பமாகவே வாழ்ந்தார். உயிர் பிரியும் தருணத்திலும் கவலையற்றவராய் தமது ஈமக் கடனை இங்கே இருக்கின்ற பெண் பிள்ளைகளே செய்ய வேண்டுமென்னும், தனது தகன முறைகள் இவ்வாறு அமைய வேண்டும் என்றும் அறிவுறுத்திவிட்டு மிகவும் சாந்தமான நிலையில் உடலாகிய கூட்டைவிட்டு மறுவுலகு சென்ருரன்ருே? எத்துணைப் பெருமை.

ஸ்ரீமான் இராசரத்தினம் அவர்கள் அட்சய ஆண்டு ஆடிமாசம் பூர்வபக்கத்துச் சதுர்த்தசித்திதி கூடிய நன்னுள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இவ்வுலகை நீங்கி இறைவன் திருவடிநீழலை அடைந்தார். ஆன்மா சாந்தியடைவதாக!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## அன்பின் மனைவி நேசரத்தினம்

### துதி

கண்ணிலே மணியுமானுய் காதிலே யோசையானுய்
எண்ணிலே லிங்கமானுய் ஏத்தவே வாக்குமானுய்
கண்ணிய புலன்கள் யாவும் களித்திட ஒருவனுனுய்
விண்ணிலே இருந்தும் என்னை விழைந்துநீ கூடுவாயே

அன்புவழி காட்டியெமக்கு இன்பநிலை யூட்டியே
மன்புவியில் மனம்வாக்கு காயமெலாம் ஒன்றுபட்டு
தென்புடன் யான் அறம் ஈட்டி வாழவழி செய்தாய்நீ
என்னிறைவன் என்கணவா எங்கிருந்துங் காப்பாயே.

தாரமாய்த் தந்தையாய்த் தாயுமாகித்
தாரணியில் எங்களுக்கோர் இராசாவுமாய்
வாரமொடு திறமையாய் நேர்மையோடு
வாழ்ந்தெம்மை வாழ்வித்த செம்மால்நீயே
தீரமொடு எம்மைவிட்டுத் தேவலோகம்
சென்றுயே என்கணவா எம்மையும்நீ
வாரமொடு காத்தருளி இரட்சிப்பாயே
வாழ்வுதரும் என்னிறைவன் நீயேயன்றோ.

மக்கள் துதி

கல்வியொடு செல்வநல் வாழ்வுதந்தாய்
கற்றோர்கள் மத்தியிலே பேசவைத்தாய்
செல்வமாம் அழியா நின் புகழால் எம்மைச்
சிறந்தோங்க வீறுநடை கொள்ளவைத்தாய்
நல்லவிருந் தாளியாய்த் தேவர்போற்ற
நாடிணையே தேவுலகம் தந்தாய் நீயே
எல்லோரும் நல்வாழ்வில் இனிதுவாழ
எங்கிருந்தும் எமைக்காப்பாய் எந்தாய் நீயே

கண்ணிமைபோல் எமைவளர்த்துக் கருணைசெய்தாய்
எண்ணம்போல் நாவாழஇளமை காத்தாய்
மண்ணுலகில் நாம்பாலர் ஒன்பதின்மர்
மாண்புபெற நினதாசி யருள்வாய் ஐயா
புண்ணியமே உருவெடுத்த புனிதா நின்னைப்
போற்றியே துதிசெய்து புந்திபூப்போம்
எண்ணிய வாறெம் வாழ்வில் குறைகள் இன்றி
இன்பமாய் வாழவழி செய்குவாயே.

தொகுத்தவர்: பண்டிதர் ஆ. சின்னத்தம்பி, வரணி.

**Reference made in the District Court of Point Pedro, on 28-7-86, presided over by T. Jogana than, Esquire, District Judge, Point Pedro & K. Kanapathipillai, Esquire, Magistrate, Point Pedro, in the presence of the members of the Point Pedro Bar to the Late Advocate**

## KANAPATHYPILLAI RAJARATNAM

**of Point Pedro**

We are gathered here today to remember and pay tribute to Advocate Mr. Kanapathypillai Rajaratnam, one of the senior members of the Bar who was suddenly taken away from our midst on the 20th of July 1986. The news of his death was a shock to us, because he appeared in this Court on his last birthday and looked to be hale and hearty. He was born on the 17th of July 1910 at Alvai. He was educated at Jaffna Hindu College, Parameswara College and Victoria College, where he excelled in sports especially in athletics and football. He was once placed first in the one mile race. He entered the University College, Colombo, but after a brief stay there, he changed his mind and entered the Ceylon Law College and passed out as a Proctor in 1942. In 1950 he was admitted and enrolled as an Advocate of the Supreme Court of Ceylon. He practised in Colombo and Gampola and was popularly called as 'Gampola Rajaratnam' to the Litigants and 'Gampola Raja' to his colleagues.

After the 1958 riots he came to Point Pedro and practised in this Court till 1968. In 1968 he returned to Colombo and continued his practice there

until riots broke out again in 1983. From 1983 he was with us till his death.

He had all the requisites for a successful lawyer. He was strong in substance and polite in manners. His love for the profession made him to be helpful to his colleagues, especially to his juniors. Many senior lawyers sought his advice on legal matters and particularly in Case Law. Invariably he had a Case Law for every problem.

I myself had sought his advice on legal matters when I was practising in Colombo and he was always ready and willing to help anyone who sought his advice.

Apart from his knowledge of the Law, he had a knowledge of humanity. I understand that he had made all arrangements for his funeral. how it should be conducted and as to who should perform the funeral rights etc. His continuous work, knowledge in great many things, common sense, politeness, honesty and sincerity made him a 'successful' lawyer.

Our deepest sympathies goes to his beloved wife and children His memory will always be green in the hearts of his colleagues. As requested by your President we direct, the Registrar of this Court to forward the proceedings of this day to the members of the bereaved family.

Sgd: **T. Joganathan**
*District Judge, Point Pedro.*
Sgd: **K. Kanapathippilai**
*Magistrate, Point Pedro.*

*28-8-86.*

காலஞ் சென்ற சட்டத்தரணி

# திரு. க. இராஜரத்தினம் அவர்களின்

மறைவைக் குறித்து, 28-7-86ந் திகதியன்று
பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
பருத்தித்துறை மாவட்ட நீதிபதி
திரு. தே. யோகநாதன்
அவர்கள் முன்னிலையிலும்
பருத்தித்துறை நீதவான்
திரு. க. கணபதிப்பிள்ளை
அவர்கள் முன்னிலையிலும் வழங்கப்பட்ட

# இரங்கலுரை

சட்டத்தரணி திரு. சி. உருத்திரா அவர்களால் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட உரை.

கனம், மாவட்ட நீதிமன்ற நீதிபதி அவர்களே, நீதவான் நீதிமன்ற நீதிபதி அவர்களே நாம் இன்று மன்றின் விடயங்களை ஆரம்பிக்க முன்பு எங்கள் பாரம்பரிய வழக்கப்படி சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் சட்டத்தரணி க. இராசரத்தினத்தின் மறைவை ஒட்டி இம்மன்றில் எங்கள் இரங்கல் உரையை இடம் பெறச் செய்வோமாக.

சட்டத்தரணிகளாகிய நாம் 18-7-86 வெள்ளிக்கிழமை வரை மன்றுக்கு வருகைதந்த சட்டத்தரணி க. இராசரத்தினத்துடன் மிக மகிழ்ச்சியாக அளவளாவி பேசிக்கொண்டு இருந்தோம். எப்பொழுதும் புன்சிரிப்புடன் காணப்பட்ட திரு க. இராசரத்தினம் அல்வாயம்பதியை வசிப்பிடமாகக் கொண்ட பிரபல வர்த்தகர் கணபதிப்பிள்ளையின் புத்திரர். மும்மூர்த்திகளில் நடுவராக 17-7-1910 இல் இவ்வுலகில் தோற்றினார்.

திருவள்ளுவரின் நூலில் கூறப்பட்ட

' ஊருணி நீர் நிறைந்தற்றே உலகு அவாம்
பேரறிவாளன் திரு''

என்ற குறள் வாக்கியத்துக்கு அமைவாக வாழ்ந்தவர். அவர் நண்பர்களால் செல்லமாக 'கம்பளை இராஜா' என்று அழைக்கப் பட்டார். தமது ஆரம்பக் கல்வியை கம்பளை புத்தசமய சங்கத்தினரால் நடாத்தப்பட்ட ஜினராஜாக் கல்லூரியில் தொடங்கி சைவசமயக் கல்வியில் ஆர்வங் கொண்டு சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் அதிபராகவிருந்த களிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் மேற்படிப்பைப் பயின்று, அவர்களின் அடி அருளி, சைவசமய நூல்களில் ஆர்வங்கொண்டு மரணம் அணுகும் தறுவாயிலும், சைவசமய நூலையே கற்றுக்கொண்டிருந்தார். கொழும்பு சர்வகலாசாலையில் படிக்கும்பொழுது 1931-ம் ஆண்டு ஓட்டப் போட்டியில் முதலிடத்தைப் பெற்ற பெருமையும் இவருக்குண்டு. இவர் உதைபந்தாட்ட வீரனாகத் திகழ்ந்து சட்டக் கல்லூரியில் படிக்கும் பொழுது கொழும்பு வை. எம். சீ. ஏ. உதைபந்தாட்டக் கிளப்பில் உதைப்பந்தாட்ட வீரர்கள் சட்டத்தரணி திரு. ஆர். ஆர். நல்லையா, அல்வாயப்பதி திரு. சி. பாலசிங்கம் (ஜே. பி) போன்றவர்களைக் கொண்ட குழுவில் ஓர் விளையாட்டு வீரனாகத் திகழ்ந்து பல உதைபந்தாட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய பெருமையும் இவருக்குண்டு. பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருந்து தொழிலாற்றிய காலத்திலும், பருத்தித்துறையில் உதைபந்தாட்ட கிளப் ஒன்றை உருவாக்கி மேல்நீதிமன்ற தேர்தல் நீதிபதியாக இருந்து இளைப்பாறிய திரு. எஸ். சிவஞானசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கிய உதைபந்தாட்டப் போட்டிகளில் அகில இலங்கை உதைபந்தாட்ட வீரனாகத் திகழ்ந்த இளைப்பாறிய சுங்க அதிகாரி (எவ். சி. ஏ) ஸ்பெல்ட்வைஸ் போன்ற வீரர்களைச் சேர்த்து பல உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்திய சிறப்பும் இவருக்கே உரியது. இவ்வாறு விளையாட்டிலும் படிப்பிலும் அதி திறமை காட்டிய இவர் அட்வகேற் ஆக மேல் நீதிமன்றங்களில் தனித்து வாதாடி, சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து பேசிய வழக்குகள் பல. புதிய சட்ட அறிக்கை புத்தகங்களில் பதியப்பட்டு அவர் நாமம் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடிய பாக்கியமும் எங்களுக்குண்டு.

இவரது புத்திரர்களில் ஒருவரான ஆனந்தராசா தந்தையின் அடியைப் பின்பற்றி சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்து இங்கிலாந்தில் சட்டப்படிப்பை மேற்கொண்ட பாக்கிய

மும் இவருக்குடையது: இவரது பெண் பிள்ளைகளில் ஒருவர் கலை வைத்திய கலாநிதிப் பட்டம் பெற்று லண்டனில் வைத்தியத் தொழில் நடாத்தி வருவதும் இவரின் புண்ணியமே.

1983ம் ஆண்டு இனக்கலவரத்தினால் கொழும்பில் ஏற்பட்ட இழப்பின் காரணத்தால் மீண்டும் இம்மன்றில் சட்டத்தரணியாகத் தோற்றி மேல்நீதிமன்றிலும் தோற்றி கட்சிக்காரருக்கு நீதியை வென்றெடுத்துக்கொண்டிருந்த பெருமையும் இவருக்கே உரியதாகும். தமது கடமைகளை உணர்ந்த இவர் 20.7.86 ஞாயிற்றுக்கிழமை காலை மந்திகை வைத்தியசாலைக்குச் செல்லமுன்பு உள் உணர்வால் தமது அநித்தியத்தை உணர்ந்து தாம் செய்யவேண்டிய சில கருமங்களை நிறைவேற்றி குடும்பத்தார்க்கு வேண்டிய புத்திமதிகளைக் கூறி ஆண்பிள்ளைகள் யாவரும் வெளிநாட்டில் இருக்க, தன்னுடனிருந்த மகளைத் தம்முடைய இறுதிச்சடங்குகளைச் செய்யவேண்டுமென்றும், உடலைத் தாமதித்து வைத்திருக்காமல் தகனம் செய்துவிட வேண்டுமென்றும் கட்டளையிட்டு காலன் அடியைச்சேர்ந்தார் என்பதைக் கேட்டதும் மிகவும் அதிர்ச்சி அடைந்தோம். இவரது குடும்பத்தவர்களுக்கு எமது அநுதாபத்தைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

இந்த இரங்கலுரையை காலஞ்சென்ற திரு. க. இராசரத்தினம் அவர்களுடைய குடும்பத்தினருக்கு அனுப்பி வைக்கும்படி சங்கத்தின் சார்பில் வேண்டுகிறோம்.



Ranjini Rathasingham

# நன்றி நவிலல்

எங்கள் இல்லத் தலைவர் இவ்வுலக வாழ்வைநீத்த செய்தியறிந்து ஓடோடி வந்து, உற்றதுன்பத்தில் பங்குபற்றி உதவிகள் பலபுரிந்தோர், இறுதிக் கிரியைகளிலும் அந்தியேஸ்டி, சபிண்டீகரணைக் கிரியைகளிலும் கலந்து பங்குபற்றியவர்கள், கௌரவித்தவர்கள், உற்றார், உறவினர், பலவகையான உதவிகளையும் செய்தோர், ஆன்மசாந்திக்கான கிரியைகள் செய்த வேதியர், இம்மலரை வெளியிட உதவியவர்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளக் கனிவான அன்பான நன்றியை நவில்கின்றோம்.

இங்ஙனம்
அன்பு மனைவியும்
பிள்ளைகளும்

திருக்கணித அச்சகம் - மட்டுவில்